www.lkedu.lk

தமிழ்ச்சங்கம் - பேராதனைப் பல்கலைக்கழகம்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர(உயர்தர) மாணவர்களுக்கான உதவிக் கருத்தரங்கு -2020

இஸ்லாமிய நாகரிகம் -I	47	T	I	நேரம்- 2.00 மணித்தியாலம்

சுட்டெண்

தொகுப்பு;

எம். ஆர். எப். நஸ்ரின்(தமிழ்துறை)

பேராதனைப் பல்கலைக்கழகம்

அறிவுறுத்தல்கள்:

*எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

*விடைதாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெணை** எழுதுக.

*விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்து பின்பற்றுக.

*1தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1),(2),(3),(4),(5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** இடுவதன் மூலம் காட்டுக.

1.அல் அரப் அல்முஸ்த.ரிபா என்பவர்கள்.

(1)இஸ்மாயில்(அலை) அவர்களின் பரம்பரையில் வந்தவர்கள்.

(2)ஆத்,ஸமூத் கூட்டத்தின் பரம்பரையில் வந்தவர்கள்.

(3)முஹம்மத் நபி(ஸல்) அவர்களின் பரம்பரையில் வந்தவர்கள்.

(4)ஜாஹிலிய்யாக் காலத்து அரேபியர்கள்.

(5)நூஹ் நபியின் சந்ததியினர்.

2.கனீமத் பொருட்களிலிருந்து கோத்திரத் தலைவர் பெற்றுக்கொண்ட நான்கு வகைப்பொருட்களில் **'அல்மிர்பா'** என்பது எவ்வகையைக் குறிக்கும்.

(1)கனீமத் பொருட்களைப் பகிர்வதற்கு முன்பு அவற்றிலிருந்து தனது விருப்பத்துக்குறிய பொருட்களாக அவர் எடுத்துக் கொண்டவை.

(2)வீரர்களிடையே சமமாசப் பகிர்வதற்கு முடியாததால் மிகுதியான பொருட்கள்.

(3)போர்க்களத்துக்கு செல்லும் வழியில் போரிடாமலே அவருக்குக் கிடைத்த பொருட்கள்.

(4)மொத்த கனீமாப் பொருட்களில் அவருக்குரிய நான்கில் ஒரு பங்குப்பொருட்கள்.

(5)மொத்த கனீமத் பொருட்களில் அரைவாசிப் பங்குப்பொருட்கள்.

3.காதிஸியப் போரில் முஸ்லிம் படைத்தளபதி.

(1)காலித் பின் வலீத்(ரழி) (2)ஸஅத் பின் அபி வக்காஸ்(ரழி)

(3)அபூ உபைதா(ரழி) (4)அப்துர்ரஹ்மான் பின் அவ்ப்(ரழி)

www.lkedu.lk

(5)ஸஅத் பின் முஆத்(ரழி)

4.”குத்ப் மினார்” அமைந்துள்ள நகரம்.

(1)பக்தாத் (2)மக்கா (3)டமஸ்கஸ்

(4)டில்லி (5)கூபா

5.இலங்கை முஸ்லிம்களின் **தேசிய பங்களிப்பு** அடங்காதது.

(1)நெசவாளர்களை அழைத்து வரல். (2)கருவாப் பயிர் செய்கை.

(3)உள்நாட்டு விவசாயத்துக்கு உதவல். (4)வெளிநாட்டுத் தூதுவர்களாகப் பணிபுரிதல்.

(5)வஹப் இப்னு அபீ ஹப்ஸாவின் பணி.

6.அல்குர்ஆனில் அதிகம் பெயர் கூறப்பட்ட நபி.

(1)முஹம்மத் நபி(ஸல்) (2) மூஸா(நபி) (3)ஆதம்(அலை)

(4)இப்றாஹீம்(நபி) (5)ஸகரிய்யா (அலை)

7.கீழே “X’ இன் கீழ் வரலாற்று நூல்கள் சிலவற்றின் ஆசிரியர்களின் பெயர்களும் ‘Y’இன் கீழ் நூல்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

X	Y
(1)இபுனு கல்தூன்	A.தாரிக் அர் ருஸ்ல் வல் முலூக்
(2)இபுனு ஸஅத்	B.தபகாதுல் கபீர்
(3)அத்தபரீ	C.அஜாஇபுல் ஹின்த்
(4)அல்-பாலாதூரி	D.முகத்திமா
(5)இபுனு ஸஹ்ராயர்	E.புதூஹுல் புல்தான்

இங்கு x இற்கமைய y யைச் சரியாக ஒழுங்குபடுத்தினால் வரும் விடை.

(1)ABCDE (2)BCAED (3)CEDAB (4)DACBE (5)DBAEC

8.குப்பதுல் கழ்ராஉ, முவக்கர், கஸ்ர் முதலிய கிராமிய மாளிகைகளை தோற்றுவித்தவர்கள் முறையே

(1)முஆவியா(ரழி), வலீத், ஹிஸாம் (2)ஹஜ்ஜாஜ், இரண்டாம் யஸீத், இரண்டாம் வலீத்

(3)மர்வான் பின் ஹகம், வலீத், ஹஜ்ஜாஜ் (4)வலீத், இரண்டாம் யஸீத், இரண்டாம் மர்வான்

(5)உமர் பின் அப்துல் அஸீஸ், வலீத், ஹிஸாம்

9.உமையா வம்சத்தில் ஹகமிய்யாக்கள் ஆட்சியைத் தோற்றுவித்தவர்.

(1)ஹிஸாம் பின் அப்துல் மலீக் (2)உமர் பின் அப்துல் அஸீஸ்

(3)மர்வான் பின் ஹகம் (4)முஆவியா பின் அபீ சுப்யான்

(5)அப்துல் மலிக் பின் மர்வான்

www.lkedu.lk தமிழ்சங்கம் போதனைப் பல்கலைக்கழகம்

www.lkedu.lk

10.துருக்கிய மெய்பாதுகாவல்களை அறிமுகப்படுத்திய அப்பாஸிய கலீபா

(1)ம.ூமூன் (2)ஹாரூன் ரஸீத் (3)மன்சூர்

(4)மு.ூதஸிம் (5)அபுல் அப்பாஸ்

11.பெரியம்மை, சின்னம்மை பற்றி விளக்கும் மருத்துவ நூல்

(1)அந்நப்ஸர் (2)கானுன் பித்திப்தி (3)கிதாபுல் மாலிகி

(4)அல்ஹாவி (5)கிதாபுல் ஜுதரி வல்ஹஸ்பாஹ்

12.ஹதீஸ்கலையில் ஹதீஸ்களுக்கென பிரத்தியேகமான சொற்பிரயோகங்கள் உள்ளன. அவற்றுள் '**முத்தபகுன் அலைகி**' எனப்படுவது.

(1)இமாம்களான புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம் எனும் இரண்டு ஹதீஸ் கிரந்தங்கள்.

(2)ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம் எனும் இரண்டு ஹதீஸ் கிரந்தங்கள்.

(3)இமாம்களான புஹாரி, முஸ்லிம் இருவரதும் நிபந்தனைகளுக்கு உட்படாத ஹதீஸ்கள்.

(4)இமாம் புஹாரி, இமாம் முஸ்லிம் இருவரும் அறிவிப்புச் செய்த முதவாதிர் தரத்திலான ஹதீஸ்.

(5)இமாம் புஹாரி, இமாம் முஸ்லிம் இருவரும் அறிவிப்புச் செய்யப்பட்டு பிற்காலத்தில் ஆய்வுக்குட்படுத்தப் பட்டு ஸஹீஹ் என அடையாளம் காணப்பட்ட ஹதீஸ்கள்.

13.கியாஸ் அமைவதற்கான அடிப்படைக் கூறுகள் யாவை?

(1)அஸ்ல்- பர்உ- இல்லத்- கத்ம் (2)மதன்- இல்லத்- ஸபப்- ஹுக்ம்

(3)அஸ்ல்- பர்உ- இல்லத்- கழா (4)மதன்- ஸபப்- பர்உ- கத்ர்

(5)அஸ்ல்- பர்உ- இல்லத்- ஹுக்ம்

14.அல்குர்ஆன் கணவன்- மனைவிக்கு இடையிலான பரஸ்பர உறவை எப்பொருளுக்கு உவமையாக குறிப்பிட்டுள்ளது?

(1)ஆடை (2)இல்லம் (3)உணவு (4)கற்பு (5)வாகனம்

15.'**யத்ரிப்**' எனும் பெயர் மதீனாவைக் குறித்தது போல ஸாம், மிஸ்ர், அந்தலூஸ் எனும் பெயர்கள் குறித்தது முறையே

(1)டமஸ்கஸ், கெய்ரோ, மதாஇன் (2)ஜெரூசலம், பக்தாத், பஸரா

(3)டமஸ்கஸ், மதாஇன், இந்தோனேசியா (4)சிரியா, எகிப்து, ஸ்பெயின்

(5)சிரியா, எகிப்து, பலஸ்தீனம்

16.கி.பி 1787 இல் கொழும்பு முஸ்லிம் மையவாடியிலிருந்து டச்சு உத்தியோகத்தர் ஒருவரால் கல்லறை நடுகல்லொன்று கண்டெடுக்கப்பட்டது. இந்நடுகல் யாருடைய கல்லறை மீது நடப்பட்டிருந்தது.

(1)அபீப் அப்துல்லாஹ் இப்னு அப்துர்ரஹ்மான்

(2)காலித் பின் பகாயா

(3)மாப்பிள்ளை லெப்பை ஆலிம்

தமிழ்ச் சங்கம்- பேராதனைப பல்கலைக்கழகம்

www.lkedu.lk

(4)கசாவத்தை ஆலிம்

(5)அப்துல்லாஹ் பின் பாதிப் அல் யமானி

17.தரீக்கா ஸ்தாபகர்களுள் அடங்காதவர்.

(1)அப்துர் காதிர் ஜீலானி (2)குவாஜா அபூ இஸ்ஹாக் கிஸ்தி

(3)ஸாஹ் வலியுல்லாஹ் (4)ஸிஹ்ராபுத்தீன் ஸுஹ்ரவர்த்தி

(5)ஸெய்யது அஹ்மத் அல் கபீர் அர்ரிபாயி

18.'அ' பகுதியின் நூற்களின் பெயர்களும்,' 'ஆ' பகுதியில் நூலாசிரியர்களின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. இவற்றை ஒழுங்குபடுத்தும் சரியான தொகுதி.

அ	**ஆ**
(1)கானூன் பித்திப்தி	A.இமாம் அபூஹனீபா
(2)கூதுல் குலூப்	B.இப்னுல் ஹைதம்
(3)அல்- மனாஸிர்	C.இமாம் ஷாபி
(4)அர்ரிஸாலா	D.இப்னு ஸீனா
(5)பிக்ஹுல் அக்பர்	E.அபூதாலிப் அல்மக்கி

(1)BCDEA (2)ABEDC (3)DEBCA (4)BADCE (5)EDCBA

www.lkedu.lk

(1)இபுனு கல்தூன்	A.தாரிக் அல் ருஸ்ல் வல் முலூக்
(2)இபுனு ஸஅத்	B.தபகாதுல் கபீர்
(3)அத்தபரீ	C.அஜாயிபுல் ஹிந்த்
(4)அல்- பாலாதூரி	D.முகத்திமா
(5)இபுனு ஸஹ்ரயார்	E.புதூஹுல் புல்தான்

(1)ABCDE (2)BCAED (3)CEDAB (4)DACBE (5)DBAEC

20.	**அ**	**ஆ**
(1)	அலி இப்னு ஸீனா	A.அல்ஹாவி
(2)	அஸ்- ஸஹ்ராவி	B.கானுன் பித்திப்தி
(3)	அர்- ராஸி	C.அத்- தஸ்ரீப்
(4)	இப்னு ஸஹ்ல்	D.ஸாதுல் முஸாபிர்
(5)	இப்னு ஜஸ்ஸார்	E.பிர்தௌஸுர் ஹிக்மா

தமிழ்ச்சங்கம்- பேராதனைப் பல்கலைக்கழகம்

www.lkedu.lk

(1)ABCDE (2)ACDEB (3)BACED (4)BCAED (5)CBEDA

21.கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் அதிபர்களாக கடமையாற்றிய இரண்டு கல்விமான்கள்.

(1)கலாநிதி T.B.ஜாயா, A.M.A. அஸீஸ் (2)அறிஞர் சித்திலெப்பை, I.L.M.A. அஸீஸ்

(3)I.L.M.A. அஸீஸ், ஓராபி பாஷா (4)கலாநிதி T.B. ஜாயா, கலாநிதி பதியுதீன் மஹ்மூத்

(5)கலாதிநி பதியுத்தீன் மஹ்மூத் , I.L.M.A. அஸீஸ்

22.சமகால இஸ்லாமிய த.ஃவா அமைப்புக்களின் **(இ.ஃவானுல் முஸ்லிமீன் ,ஜமாஅத் தப்லீ.ஃ ,ஜமாத்தே இஸ்லாமி)** ஸ்தாபகர்கள் முறையே.

(1) இமாம் ஹஸனுல் பன்னா, மௌலானா இல்யாஸ், மௌலானா மௌதூதி

(2)செய்யித் குதுப், ஸகரிய்யா ஸாஹிப், நஈம் சித்தீகி

(3)உமர் தில் மிஸானி, இன்ஆமுல் ஹஸன், யூசுப் இஸ்லாகி

(4)ஹஸன் ஹுழைபி, ஸகரிய்யா ஸாஹிப், மௌலானா மௌதூதி

(5)ஸெய்யித் குதுப், இன்ஆ முல்ஹஸன் ,யூஸுப் இஸ்லாகி

23.அல்- முஹ்கம் என்பதன் கருத்து யாது?

(1)மாற்றத்துக்கு உட்பட்ட அல்குர்ஆன் வசனங்கள்.

(2)பல பொருளைக் கொடுக்கும் அல்குர்ஆன் வசனங்கள்.

(3)மீட்டி, மீட்டிச் சொல்லப்பட்ட அல்குர்ஆன் வசனங்கள்.

(4)மக்கீ- மதனி சூராக்களை அடையாளப்படுத்தும் அல்குர்ஆன் வசனங்கள்.

(5)ஒரே பொருளைத் தரும் திட்டவட்டமான அல்குர்ஆன் வசனங்கள்.

24.இலங்கை முஸ்லிம்களின் ஆரம்பம் பற்றியதான பின்வரும் கூற்றுக்களுள் சரியானது.

(1)இஸ்லாத்தின் முதல் நூற்றாண்டிலேயே இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகியுள்ளது.

(2)மொகலாய மன்னன் ஔரங்கஸீப் இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகக் காரணமாக இருந்துள்ளார்.

(3)கி.பி 15ம் நூற்றாண்டிலேயே இலங்கையில் முஸ்லிம்கள் குடியேறியுள்ளனர்.

(4)முஹம்மத் பின் காஸிமின் சிந்து வெற்றியைத் தொடர்ந்தே இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகியுள்ளது.

(5)இலங்கை முஸ்லிம்களின் ஆரம்பக் குடியேற்றங்கள் கண்டி இராசதானியில் அமைந்திருந்தன.

25.நுபுவ்வத்துக்கு முன்னர் நபியவர்களின் தலைமைத்துவத்தை குறைஷியர் அங்கீகரித்திருந்தனர் என்பதை எடுத்துக் காட்டக்கூடிய மிகப்பொருத்தமான நிகழ்வு.

(1)ஹில்ஸ்புல் புழூம் ஒப்பந்தத்தில் கலந்து கொண்டமை.

(2)ஹர்புல் புஜ்ஜாரில் ஓர் உதவியாளராகக் கலந்து கொண்டமை.

(3)தாருல் நத்வா ஆலோசனைக் கூட்டங்களில் கலந்து கொண்டமை.

(4)க.ஃபா புனர்நிர்மானத்தின் போது குறைஷியரிடையே ஏற்பட்ட பிணக்கை சமரசம் செய்தமை.

(5)கதீஜா அம்மையார் தனது வர்த்தகத்தை அவர்களிடம் ஒப்படைத்திருந்தமை.

தமிழ்ச்சங்கம்- அரசுகலைப் பல்கலைக்கழகம்

www.lkedu.lk

- **26- 33** வரையுள்ள வனாக்களில் இரண்டு வகையான கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள சோடிக் கூற்றுக்கு கீழேயுள்ள 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகப்பொருத்தமானது எது என்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் பல்தேர்வு விடைப்பத்திரத்திலுள்ள ஐந்து கூடுகளுள் பொருத்தமானதுக்கு அடையாளமிடுக.

அட்டவணை

இலக்கம்	1ம் கூற்று	2ம் கூற்று
(1)	சரியானது	சரியானது
(2)	பிழையானது	சரியானது
(3)	சரியானது	பிழையானது
(4)	பிழையானது	பிழையானது
(5)	சரியானது	சரியானது, முதலாம் கூற்றை விளக்கல்

	முதலாம் கூற்று	இரண்டாம் கூற்று
26.	அப்பாஸிய கிலாபத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த வறுமையானது ஹாருன் அர் ரஸீதின் காலத்தில் இல்லாதொழிக்கப்பட்டது.	முதன் முதலாகத் தோன்றிய மத்ஹப் ஹன்பலி மத்ஹப் ஆகும்.
27.	மு.்.தஸீலாக்களின் முன்னோடி ஹஸனுல் பஸரி ஆவார்.	ஸாஹிபு கராஜ் என்பவர் மாகாண ரீதியில் வரி சேகரிப்பாளர்.
28.	சிந்துப் பிரதேசமானது உமர் இப்னு அப்துல் அஸீஸின் காலத்தில் வெற்றி கொள்ளப்பட்டது.	உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் எழுச்சியாக கி.பி.1924ம் ஆண்டு காணப்படுகின்றது.
29.	மன்னர் ஔரங்கசீப் தனது கைப்பட எழுதிய குர்ஆன் பிரதிகளை விற்று வாழ்க்கை நடாத்திய சிற்றரசர் ஆவார்.	எரிகாரம் பற்றி விளக்கும் மருத்துவ நூலை ஜாபிர் பின் ஹைய்யான் எழுதினார்.
30.	நுபுவ்வத் 7-10 வரை ஷி.்.பு அபிதாலிபில் நபி (ஸல்) அவர்களும் , பனூ ஹாஸிம்களும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.	நபி(ஸல்) அவர்களது பிரச்சார முயற்சியைத் தடுத்து நிறுத்த குறைஷிகள் பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டனர். அதில் ஷி.்.பு அபீதாலிப் நிகழ்வு முக்கியமானது.
31.	க.்.பாவில் தொங்கவிடப்பட்டிருக்கும் ஏழு கவிதைத் தொகுப்புக்களும் 'ஸ்ப்உ முஅல்லகா' என அழைக்கப்படுகிறது.	முஆத் இப்னு ஜபல் (ரழி) மக்காவில் இஸ்லாத்தைத் தழுவியமை.
32.	அப்துல்லாஹ் பின் ஸபாவின் கிளர்ச்சியாளர்களால் உஸ்மான்(ரழி) கொலை செய்யப்பட்டார்.	இமாம் கஸ்ஸாலி அஷ்அரி சிந்தனைக்கு உரமூட்டினார்.
33.	அபூபக்கர் (ரழி) ஜாமிஉல் குர்ஆன் எனப்பட்டார்.	நக்ஷபந்தியா என்பது வழிகெட்ட அகீதாப் பிரிவாகும்.

34.கோல்புறூக் பிரபு அறிமுகப்படுத்திய சட்ட நிரூபன சபை, டொனமூர் பிரபு அறிமுகப்படுத்திய அரசாங்க சபை, சோல்பெரி பிரபு அறிமுகப்படுத்திய பாராளுமன்றம் எனும் மூன்று நிறுவனங்களிலும் அங்கம் வகித்த முஸ்லிம்கள்.

(1)டப்ளியூ. டீ.டீ. ஜாயா (2)சேர் ராசிக் பரீட்

(3)டப்ளியூ. சீ. அப்துர் ரஹ்மான் (4)டப்ளியூ. டி. எச். ஏ. காதர்

(5)சேர். மாக்கான் மாக்கார்.

35.முஸ்லிம் ஸ்பெய்னில் இறுதியாக வீழ்ச்சியடைந்த முஸ்லிம் சிற்றரசின் பெயர்.

(1)ஸெல்ஜுக் (2)கிரனாடா (3)புவைஹித்

(4)நஸ்ரீட் (5)முவஹ்ஹிதூன்

36.ஸைத் இப்னு ஸாபித்(ரழி) சிறப்பிடம் வகிப்பது.

தமிழ்ச்சங்கம் பல்கலைக்கழகம் யாழ்தேவி

www.lkedu.lk

(1)தப்ஸீர் துறையில்

(2)அதிகமான ஹதீஸ்களை அறிவித்தவர் என்ற வகையில்

(3)நபியவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற வகையில்

(4)வஹியை எழுதுபவராக இருந்தமை

(5)ஹீப்ரு மொழியைக் கற்றிருந்தவர் என்ற வகையில்

37.'அல்குர்ஆனை விளங்குவது' எனும் பொருளைத் தரும் பதம்.

(1)திலாவத்துல் குர்ஆன் (2)தத்ரீஸுல் குர்ஆன் (3)ஜம்உல் குர்ஆன்

(4)ஹிப்ழுல் குர்ஆன் (5).பஹ்முல் குர்ஆன்

38.'ஹத்' எனும் தண்டனையானது

(1)அல்லாஹ்வும் ரஸூலும் விதித்த தண்டணை

(2)நீதிபதி அளித்த தண்டணை

(3)கலீபா அளித்த தண்டணை

(4)இமாம் அளித்த தண்டணை

(5)பழிக்குப் பழி வாங்குதல்.

39.இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் பாதுகாப்புக்கென முதன்முதலில் கடற்படை ஒன்றினை நிறுவிய கலீபா

(1)முஆவியா(ரழி) (2)அபூபக்கர்(ரழி) (3)அலி(ரழி)

(4)உமர்(ரழி) (5)உஸ்மான்(ரழி)

www.lkedu.lk

40.மா ரக லே (என்னைப் பாதுகாத்த இரத்தம்) என்ற வார்த்தைகளால் சிங்கள மன்னனின் பாராட்டைப் பெற்ற மன்னனுக்காக தன்னுயிர் நீத்த முஸ்லிம் பெண்மனி வாழ்ந்த இடம்.

(1)தென்னகும்புர (2)பங்கரம்மான-மகியங்கன (3)தன்துரே

(4)கடுகண்ணாவ (5)கஹடபிடிய

41.பின்வரும் வரலாற்று நிகழ்வுகளில் **தூமதுல் ஜன்தல்** என்ற இடம் தொடர்புபடும் நிகழ்வு.

(1)தாத்தாரியருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான போராட்டத்தில் தாத்தாரியர் தோல்வியடைந்தமை.

(2)சிப்பீன் யுத்தத்தின் பின் கலீபா அலி(ரழி), முஆவியா(ரழி) ஆகிய இருவரதும் பிரதிநிதிகள் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தியமை.

(3)உஹத் யுத்தத்தில் இரண்டாம் கட்டப் போராட்டத்தில் முஸ்லிம்கள் திடீரெனத் தாக்கப்பட்டமை.

(4)நபியவர்களுக்கும் ஸஹாபாக்களுக்கும் உயிருள்ள வரை போராடுவோம் என்று மரம் ஒன்றின் கீழ் சத்தியப் பிரமாணம் செய்து கெபண்டமை.

(5)ஹிஜ்ரத்தின் போது நபிகளாரைத் துரத்தி வந்து அன்னாரைக் கைப்பற்ற முயற்சித்த சுறகா பின் மாலிக் பாலைவன மண்ணில் புதைந்தமை.

42.இஸ்லாத்தின் வெற்றியை உறுதி செய்ததில் காதிஸிய்யா, யர்மூக் யுத்தங்கள் பிரதானமானவை. அவை இடம்பெற்ற பிரதேசங்கள்.

(1)பாரசீகம்- உரோம் (2) ஆர்மினியா- அசர்பைஜான் (3)சிந்து- ஸ்பெய்ன்

(4)சின்னாசியா- மத்தியாசியா (5)மத்தியாசியா- வட ஆபிரிக்கா

www.lkedu.lk

43.பின்வருவனவற்றில் எது காரிஜிகளின் கோட்பாடுகளில் ஒன்றாகும்.

(1)பாவம் செய்வோருக்கு ஷபாஅத் கிடையாது.

(2)இமாம்கள் பாவம் புரியாதவர்கள்.

(3)மனிதன் தானாகவே தன் செயலை உருவாக்குகின்றான்.

(4)இறைவனுக்கு ஷிபாத் எனும் இன்னொரு பகுதி கிடையாது.

(5)அல்லாஹ்வின் உதவியின்றி மனிதன் சுயமாக செயற்பட முடியாது.

44.அப்பாஸியர் காலத்தில் கடமையாற்றிய மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரத்தையுடைய அமைச்சர்கள் அழைக்கப்பட்ட முறை.

(1)அமீர் அல் உமரா (2)காழி அல் குழாத் (3)ஹாஜிப்

(4)வஸீர் அத்தன் பீத் (5)வஸீர் அத்தப்வீழ்

45.கீழ்வரும் கூற்றுக்களுள் உண்மைக்குப் புறம்பானது.

(1)வஹ்தானியா என்பது ஏகத்துவத்துடன் தொடர்பானது.

(2)ஹாருன் அல்ரஷீத் முவத்தாவை மதீனா பள்ளிவாசலில் கற்றார்.

(3)உபைதுல்லாஹ் பின் ஸியாத் உமையா கொடூரமான தளபதி.

(4)ஹிஷாம் இப்னு அப்துல் மலிக் குப்பதுஸ்ஸஹ்ராவை நிர்மானித்தார்.

(5)முஆவியா (ரழி) உமையா வம்ச ஆட்சியைத் தோற்றுவித்தார்.

- பின்வருவனவற்றை கவனத்தியிகொண்டு 46 – 48 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

A. ஷராபி.˙. ஸாபிகா B. அல்பதானி

C. மதன் D. உர்ப்

E. அஸ்மாஉல் ரிஜால் F.உஸ்துர்லாப்

G.ஸத்துத்தராயி.˙. H.ஷம்ஸிய்யா

I. மவ்கூப் J.கிதாப் பிர்ரமத்

46.ஹதீஸ் கலையுடன் தொடர்பான தொகுதி.

(1)ABC (2)IHJ (3)CEI (4)CIH (5)CEA

47.வானவியல் கலைகளுடன் தொடர்பான விடயங்களின் தொகுதி.

(1)FBE (2)BFH (3)BIJ (4)ADE (5)HIJ

48.சட்ட மூலாதாரங்களுடன் தொடர்பான விடயங்களின் தொகுதி.

(1)AGE (2)CEI (3)AFB (4)CDE (5)ADG

49.ஐன் ஜாலூத் போர்க்களத்தில் முஸ்லிம்களால் வெற்றி கொள்ளப்பட்ட எதிர்தரப்பினர்.

(1)கிறிஸ்தவர்கள் (2)யூதர்கள் (3)தாத்தாரியர்கள்

(4)கராமிதாக்கள் (5)பனூ கைனுகா குழுவினர்

50.'இலங்கை முஸ்லிம்கள் - 1000 வருட காலம் இன ஐக்கியம்' என்ற தலைப்பில் இலங்கை முஸ்லிம்கள் பற்றிய நூலை எழுதியவர்.

தமிழ்ச்சங்கம்- மோதலைவு பல்கலைக்கழகம்

www.lkedu.lk

(1)பேராசிரியர் சிரிமா கிரிபமுனே

(2)கலாநிதி லோனா தேவராஜா

(3)பேராசிரியர் எஸ்.ஏ. இமாம்

(4)கலாநிதி கே. டப்ளியூ. குணவர்த்தன

(5)கலாநிதி டி.பீ. எச்.ஜயசிங்க

www.lkedu.lk

தமிழ்ச்சங்கம்- பேராதனைப் பல்கலைக்கழகம்

www.lkedu.lk

தமிழ்ச்சங்கம்- பேராதனைப் பல்கலைக்கழகம்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர) மாணவர்களுக்கான உதவிக் கருத்தரங்கு - 2020

இஸ்லாமிய நாகரிகம்- II

47	T	II

நேரம்: மூன்று மணித்தியாலம்

சுட்டெண்

தொகுப்பு : எம்.ஆர். எப். நஸ்ரின்

தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

அறிவுறுத்தல்கள்:

பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி I

1. (1) நபி (ஸல்) அவர்கள் காலத்தில் அல்குர்ஆன் பாதுகாக்கப்பட்ட முறை பற்றி சுருக்கமாக விளக்குக.
(2) இஸ்லாமிய நாகரிகத்தின் சிறப்புப் பண்புகளைக் குறிப்பிடுக.
(3) 'அல்- ஹதீஸ்', 'அஸ்ஸுன்னா' பதங்கள் தரும் பொருளைத் தெளிவுபடுத்துக.
(4) அல்குர்ஆனை விளக்குவதற்கு ஹதீஸ் இன்றியமையாதது என்பதை உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டுக.
(5)ஹதீஸ் கலை வளர்ச்சிக்கு இமாம் புஹாரி (ரஹ்) அவர்களின் பங்களிப்பை மதிப்பீடு செய்க.
(20 புள்ளிகள்)

2. (1) இரண்டாம் அகபா உடன்படிக்கையின் நியதிகளைக் குறிப்பிடுக.
(2) கலீபா உமர் (ரழி) நீதி பரிபாலனத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் யாவை?
(3) இஜ்திஹாத் என்றால் என்ன? இஜ்திஹாத்துக்கான அல்குர்ஆன், ஸுன்னா ஆதாரங்களைக் குறிப்பிடுக.
(4) 'இஜ்திஹாதின் வாயில் மூடப்பட்டுள்ளது' என்ற சிந்தனை இஸ்லாமிய சட்டத்துறையில் ஏற்படுத்திய தாக்கங்களைக் குறிப்பிடுக.
(5) நவீன காலப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இஜ்திஹாதின் பங்கு யாதென்றாராய்க.
(20 புள்ளிகள்)

3. (1) அப்பாஸியக் கிலாபத்தின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுக.
(2) அப்பாஸிய கிலாபத்தை ஸ்தீரப்படுத்துவதில் கலீபா மன்சூரின் வகிபாகத்தைக் குறிப்பிடுக.
(3) எழுத்தணி வகைகள் நான்கைக் குறிப்பிட்டு அவற்றின் வடிவமைப்பை விபரிக்குக.
(4) மஸ்ஜித் கட்டடக் கலையின் சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.
(5) அல் ஹம்றா மாளிகையின் சிறப்பு அம்சங்களை விபரிக்குக.
(20 புள்ளிகள்)

பகுதி II

4. (1) தப்ஸீர் என்றால் என்ன? தப்ஸீர் கலையின் தோற்றத்துக்கு வழியமைத்த காரணிகளைக் குறிப்பிடுக.
(2) தாபிஈன்கள் காலத்தில் தப்ஸீர் கலையில் ஏற்பட்ட வளர்ச்சியை விளக்குக.
(20 புள்ளிகள்)

5. (1) கலீபா அப்துல் மலிக் தனது ஆட்சியில் எதிர்கொண்ட சவால்களையும் அவற்றை எவ்வாறு வெற்றி கொண்டார் என்பதையும் விளக்குக.
(2) வலீத் பின் அப்துல் மலீக் காலத்தில் இஸ்லாமிய சாம்ராஜ்யம் வியாபகமுற்ற பாங்கைத் தெளிவுபடுத்துக.
(20 புள்ளிகள்)

6. (1) மதீனா சாசனத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.
(2) பத்ரு யுத்தத்துக்கான காரணிகளையும் அதில் முஸ்லிம்கள் வெற்றி அடைந்தமைக்கான காரணங்களையும் சுருக்கமாக விளக்குக.
(20 புள்ளிகள்)

7. (1) கிரேக்க நாகரிகம் இஸ்லாமிய நாகரிகத்தில் ஏற்படுத்திய சாதக, பாதகங்களைக் குறிப்பிடுக.

www.lkedu.lk

(2) முஸ்லிம் ஆட்சியாளர்கள் கல்வி நடவடிக்கைகளை வளப்படுத்த எடுத்த முயற்சிகளை ஆராய்க.

(20 புள்ளிகள்)

8. (1) ' நபிகளாரின் மதீனா ஹிஜ்ரத் திட்டமிட்ட செயலொன்றாகும்' ஆராய்க.

(2) இஸ்லாத்தின் பரவலில் ஹிஜ்ரத் ஏற்படுத்திய தாக்கத்தை விளக்குக.

(20 புள்ளிகள்)

www.lkedu.lk

தமிழ்ச்சங்கம்- பாடத்தினைப் பல்கலைக்கழகம்